2010 நவம்பர் 9]

உறுப்பினர் அவர்கள் அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் தயாராக இருக்கிறது என்று சொன்னார்கள். நிலம் தயாராக இருந்தால் இந்த ஆண்டே துணை மின் நிலையம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இரண்டாவதாக, அவர் இன்னொரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா என்று கேட்டார். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் ஒரு கடிதம் எழுதித் தந்தால் அரசாங்கம் ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

சந்தை

***101606—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் வட்டம், காவல்கிணறு சந்திப்பில் குளிர்சாதன வசதியுடன் கூடிய காய்கனிச் சந்தை துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன். ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி, காவல்கிணறு பகுதியில் அமைந்துள்ள மலர் ஏல மையத்தில் உள்ள 40 கடைகளில் 20 கடைகளில் விவசாயிகள் நேரடியாக காய்கறிகள் மற்றும் பழங்களைக் கொண்டு வந்து விற்பனை செய்யவும், அவ்வளாகத்தில் அமைந்துள்ள 5 டன் கொள்ளளவு கொண்ட இரண்டு குளிர்பதனக் கிடங்குகளில் ஒரு குளிர்பதனக் கிடங்கு காய்கறிகள் சேமித்து வைத்துக்கொள்ளப் பயன்படுத்தப்படுகின்றது. கடந்த 3–11–2010 அன்று காய்கறி மற்றும் கனிகள் விற்பனை துவக்கப்பட்டுள்ளது. துவக்க விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்களும் கலந்து கொண்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2010 நவம்பர் 9

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.*

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், காவல்கிணறு பகுதியானது திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் கேரளாவினுடைய தலைநகரான திருவனந்தபுரத்திற்கு மையப் பகுதியில், தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பகுதியாகும். ஆகவே, அங்கு ஒரு மலர் வணிக வளாகம் வேண்டுமென்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரிடம் கேட்ட போது, உடனடியாக நம்முடைய துணை முதல்வர் நேரடியாக அங்கு வருகைதந்து, அவருடைய திருக்கரத்தினால் அடிக்கல் நாட்டப்பட்டு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் அது திறக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மலர் வணிக வளாகத்தில் காலை 10–00 மணியுடன் மலர் விற்பனை முடிந்த பின்பு அந்த இடத்தில் காய்கறிகள் விற்பனை செய்யவேண்டும். அதுவும், மொத்தமாக விவசாயிகள் அதிகமாகக் கொண்டுவருகின்ற அந்தக் காய்கறிகளை வாங்குவதற்கு 20 மொத்த வியாபாரிகளை அனுமதித்து அவர்கள் அங்கிருந்து பிற மாநிலங்களுக்கும் பிற மாவட்டங்களுக்கும் கொண்டு செல்கின்ற அந்த வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, விவசாயிகளுடைய காவலராக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் அதற்கும் உடனடியாக ஆணை வழங்கி, கடந்த 3–11–2010 அன்று நம்முடைய தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனைச் சங்கத்தினுடைய தலைவர் அக்ரி திரு. கே.பி.டி. கணேசன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்பாவு, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. மு. அப்பாவு: திறந்து வைக்கப்பட்ட அடுத்த நாளே 50 டன், 60 டன் காய்கறிகள் அந்தப் பகுதிக்கு வந்துவிட்டன. இப்போது அந்த இடத்தில் வாழைக்காய் மார்க்கெட்டை அமைக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றோம். விவசாயிகளுடைய விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்கவேண்டுமென்பதற்காக தலைவர் கலைஞருடைய ஆட்சியில் நல்ல பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு, அந்தப் பகுதியில்

2010 நவம்பர் 9]

வாழைக்காய் விற்பனை செய்வதற்கு அடிப்படை வசதிகளையும் செய்து தர நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியும் கேட்டுவிட்டு, அங்கே காவல்கிணறு பகுதியிலே என்னென்ன பணிகள் நடைபெறுகின்றன, என்னென்ன பணிகளை அரசு அனுமதித்துள்ளது என்று அவரே பதில் சொல்லிவிட்ட பிறகு நான் பதில் சொல்ல ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்பாவு, வேறு ஒன்றுமில்லையே? (குறுக்கீடு) எல்லாமே நீங்களே சொல்லிவிட்டீர்களே! (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. மு. அப்பாவு: நன்றி மட்டும் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதோடு, வாழைக்காய் வைத்து விற்பதற்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காவல்கிணறு பகுதியைவிட்டு வேறு எதற்கும் நகரமாட்டேன் என்று பிடிவாதமாக ஆண்டாண்டு காலமாக இருக்கின்றார். ஆகவே, அவருடைய கோரிக்கைகளெல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் 20 கடைகள் இருக்கின்றன. அந்தக் கடைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயத்திலே உழவர் சந்தை அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு தயார் நிலையில் இருப்பதாக அறிகிறேன். காங்கேயத்திலே எப்போது உழவர் சந்தை துவக்கப்படும் என்கின்ற

செய்தியைக் கேட்பதோடு, சென்னை போன்ற பெரு நகரங்களிலே, குறிப்பாக சென்னையிலே, சென்னையைச் சுற்றியுள்ள விவசாயிகளுடைய நலன் கருதி மெகா உழவர் சந்தை அமைக்கிற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா? அது குறித்து அரசு என்ன பதில் அளிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே மெகா உழவர் சந்தை அமைக்க கால்கோள் விழா செய்திருக்கின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

விழிப்புணர்வு முகாம்

***62474—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து கிராமப் பகுதிகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து கிராமப் பகுதிகளுக்கென தனியே விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்துவது குறித்த பொருள் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS